**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

#### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 32 ஆம் பிரிவுக்கு முரணாக செலுத்த வேண்டிய ரூபா 97,969,813 முகவர் தரகு மீளாய்வாண்டின் போது ரூபா 10,687,128 பெறவேண்டிய முகவர் தரகிற்கு எதிரீடு செய்யப்பட்டிருந்தது. | வரவு மற்றும் செலவு மீதிகள் இரண்டும் முகவர் தரகு கட்டுப்பாட்டுக் கணக்கில் உள்ளடக்கப்படுகின்றன. வரவு அல்லது செலவு மீதி கணனி முறைமையிலிருந்து பெறப்பட்ட தேறிய பெறுமதியாக காட்டப்படுகின்றது. இது உரிய பட்டியலில் காட்டப்பட்டுள்ளது.<br><br>இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யக்கூடாது என முன்னைய வருடங்களில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமையால் எதிர்காலத்தில் இரண்டு தனித்தனி கணக்குகளில் கட்டுப்பாட்டு கணக்கின் மீதிகளை காட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இன் 9 ஆம் பிரிவுக்கு முரணாக இருப்புக்களின் ரூபா 201,080,934 தொகையான கிரயமானது தேறிய கைக்கிட்டும் பெறுமதி மதிப்பீடு | இலங்கை கணக்கீட்டு நியம இல. 2 இன் பிரகாரம் கிரயம் அல்லது தேறிய கைக்கிட்டும் பெறுமதியில் குறைந்ததில் இருப்புக்கள் அளவிடப்பட வேண்டிய போதிலும் இவ் | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் இருப்பு பெறுமதி காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படாமல் கூட்டுத்தாபனத்தால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | இருப்பு நுகர்வுக்காக மாத்திரமே பயன்படுத்தப்பட்டது, ஆகையால் இது கிரயத்தில் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது.<br><br>இருப்பில் உள்ளடக்கப்பட்ட பயன்படுத்தப்பட முடியாத இருப்பு மற்றும் அசைவற்ற இருப்பு என்பன பல ஆண்டுகளாக முன்கொண்டு வரப்படுகின்றதுடன் பயன்படுத்தப்பட முடியாத இருப்புக்கள் அகற்றப்படுவதற்கு பட்டியலிடப்படுகின்றன. நாட்டில் நிலவிய பாதகமான சுகாதார நிலைமை காரணமாக பிற்போடப்பட்டிருந்த இருப்பு அகற்றல் தொடர்பான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். அத்துடன் பயன்படுத்தப்பட முடியாத இருப்புக்கள் மற்றும் அசைவற்ற இருப்புக்களை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (இ) | ரூபா 3,386,515,041 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் முழுமையாக முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டு தற்போதும் பயன்பாட்டில் உள்ள போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் குறித்த சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கும் நிதிக்கூற்றுகளில் நியாயமான பெறுமதியை காட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் 13 இன் 24 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பாட்டில் உள்ள போதிலும் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதியில் காட்டப்பட வேண்டிய போதிலும் நடைமுறை காரணங்களால் அதனை செய்ய முடியதிருந்தது. ஆகையால் கொள்வனவு பெறுமதி கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்தது. | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட ரூபா 100 மில்லியன் தொகையான அரசாங்க மானியத்தை பயன்படுத்தி 2019 ஆம் ஆண்டில் ரூபா 75,167,126 பெறுமதியான உபகரணங்கள் | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 100 மில்லியன் மானியத்திற்குரிய சொத்துக்களை பெறும் நடவடிக்கை 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. காலக்கழிவை கணிப்பிடும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களின் பெறுமதியில் காலக்கழிவை கணிப்பிடுவதற்குப் பதிலாக அரசாங்க மானியத்தின் ரூபா 100 மில்லியன் மொத்த பெறுமதியில் காலக்கழிவு கணிப்பிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக ஏனைய வருமானம் ரூபா 4,966,575 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அரசாங்க மானியம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் பொருள் பெறுவனவுக் குறிப்புக்கள் வழங்கப்பட்டன. ஆகையால் இது 2019 ஆம் ஆண்டில் போக்குவரத்திலுள்ள பொருட்கள் கணக்கில் காணப்பட்டிருந்தது. குறித்த மீதிகள் 2020 ஆம் ஆண்டில் தொடர்புடைய கணக்குகளுக்கு மாற்றப்பட்டன. |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகவர் தரகு தொடர்பான தகவல்களை கணனி முறைமை மூலம் தனித்தனியாக பெற்றுக்கொள்ளக்கூடியவாறு கூட்டுத்தாபனத்தால் கணனி தகவல் முறைமை பேணப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 87,282,685 தொகையான முகவர் தரகு தொடர்பான வயது பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட முடியாதிருந்தது. ஆகையால் குறித்த மீதிகளின் தற்போதைய நிலையை சரிபார்க்க முடியாதிருந்தது. | தற்போது நிதிப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற கணனி முறைமை முகவர்களுக்கு செலுத்த வேண்டிய தரகு தொடர்பான தனித்தனியான பதிவுகளை பேணக்கூடியவாறு உருவாக்கப்பட்டிருக்கவில்லை. இந்த கணனி முறைமை பல ஆண்டுகளாக செயற்பாட்டில் இருப்பதால் புதிய மாற்றங்களைச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் சரிபார்க்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கணனி முறைமையிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய முகவர் தரகு தொடர்பாக வயது பகுப்பாய்வை (கையேடு) தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | போதுமான தகவல்கள் பேணப்பட வேண்டியதுடன் சரியான வயது பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் தொகை | உப ஏடுகளின் பிரகாரம் தொகை | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | திரண்ட பெறுமானத் தேய்வு ஏற்பாடு | 3,694,689,745 | 3,703,594,072 | 8,904,327 | திரண்ட பெறுமானத்தேய்வு பெறுமதியில் ஏற்பட்ட வேறுபாட்டை இனங்கண்டு சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வேறுபாட்டிற்கான காரணங்களைச் சரிபார்த்த பின்னர் திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | காசு மற்றும் காசுக்கு சமமானவை | 103,314,232 | 108,676,857 | 5,362,625 | சமீபத்திய ஆண்டுகளில், இந்த சேமிப்புக் கணக்கு மூலமான கொடுக்கல் வாங்கல்கள் குறைவாகவே உள்ளன. ஆகையால் இப் பெறுமதி முதலீட்டு பெறுமதியாகக் கருதப்பட்டு முதலீடுகளின் கீழ் காட்டப்பட்டது. எனினும், தற்போது இந்தக் கணக்கு மூலம் கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன, ஆகையால் 2021 ஆம் ஆண்டு முதல் காசு மற்றும் காசுக்கு சமமானவையாக காட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.5 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்கள் தொடர்ச்சியாக குறைவடைந்திருந்ததுடன் 2015 ஆம் ஆண்டிற்கான ரூபா 1,219,290,585 தொகையான கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்கள் | பதிலளிக்கப்படவில்லை. | சிறந்த நிதி முகாமைத்துவம் அமுல்ப்படுத்தப்பட்டு, நட்டங்களை தவிர்ப்பதற்கு |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 190,563,478 வரை ரூபா 1,028,727,107 ஆல் குறைவடைந்திருந்தது. மேலும் அரசாங்க மானியத்தின் விளைவாக 2018 ஆம் ஆண்டின் போது இலாபம் ஈட்டப்பட்டிருந்த போதிலும் முன்னைய 5 ஆண்டு காலத்திற்கு மேலாக கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்தது. மேலும் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான வங்கி மேலதிகப்பற்று ரூபா 244,648,000 ஆக காணப்பட்டதுடன் இது 2019 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 482,718,683 ஆகவும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 258,728,044 ஆகவும் காணப்பட்டது. இத் தொடர்ச்சியான நட்டம் கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்கள் மற்றும் உரிமை மூலதனத்தை பாதித்திருந்ததுடன் திறைசேரி அல்லது அரசாங்கத்தின் நிதி உதவியின்றி கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையானது நிச்சயமற்றதாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1985 மற்றும் 1992 ஆம் ஆண்டுகளில் லங்கா புவத்திடமிருந்து பங்குகளை கொள்வனவு செய்வதற்காக கூட்டுத்தாபனத்தினால் ரூபா 1,104,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரை எந்தவொரு பங்கிலாபமும் பெறப்பட்டிருக்கவில்லை. | ரூபா 1,104,000 | முதலீடுகளின் உரிமைத்துவம், இருக்கும் தன்மை மற்றும் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்கள். | லங்கா புவத் லிமிட்டட்டிடம் இருந்து பங்குச் சான்றிதழ்களைப் பெறுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் பல தடவைகள் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில், அவ்வப்போது நிறுவனத்தின் இடமாற்றங்களினால் பங்குச் சான்றிதழ்களின் பிரதிகள் தவறவிடப்பட்டிருந்தன | முதலீடுகளை உறுதிப்படுத்துவதற்கு ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | என லங்கா புவத் அறிவித்திருந்தது.<br><br>லங்கா புவத் லிமிட்டட் தற்போது செயற்பாட்டில் இல்லை. நிறுவனம் அமைந்துள்ள இடத்தைக் கண்டுபிடிக்க முடியாதிருந்ததுடன் குறித்த விடயம் தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதம் கையளிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இந் நிறுவனம் 1985 ஆம் ஆண்டு நிறுவப்பட்டிருந்ததுடன் அப்போதைய பொறுப்பான அமைச்சரின் அறிவுறுத்தலின் பிரகாரம் முதலீடு செய்யப்பட்டது. இது தொடர்பான சான்றாக பங்குச் சான்றிதழ்களின் சில பிரதிகள் காணப்படுகின்றன. | |
| (ஆ) | உடன்படிக்கையின்றி மேற்கொள்ளப்பட்ட எதிர் வணிக கொடுக்கல்வாங்கல்கள் | ரூபா 3,030,564 | சம்பந்தப்பட்ட சேவை கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டிருந்ததை உறுதிப்படுத்தும் சான்று. | கருத்துரை வழங்கப்படவில்லை. | உடன்படிக்கைகளை கைச்சாத்திடுதல் அவசியமான சந்தர்ப்பங்களில் முறைப்படுத்தப்பட வேண்டியதுடன் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தகவல்கள் வழங்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் மொத்த கடன்பட்டோர் மீதி ரூபா 507,789,779 ஆக காணப்பட்டதுடன் அதில் 45 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 229,200,950 தொகையானது அரசாங்க நிறுவனமொன்று உட்பட ரூபா 5 மில்லியனுக்கும் அதிகமான பெறுமதிகளையுடைய 10 கடன்பட்டோரை உள்ளடக்கியிருந்தது. தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெறவேண்டிய தொகையைப் பிரதிநிதித்துவப்படுத்திய ரூபா 10 மில்லியன் தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட முறையான உடன்படிக்கை காணப்படாததன் காரணமாக இது நிச்சயமற்றதாக காணப்பட்டது. மேலும் 32 அரசாங்க நிறுவனங்கள் உட்பட 170 கடன்பட்டோர் மீதிகளை கொண்டிருந்த 5 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ரூபா 97,117,914 கடன்பட்டோர் மீதியில் ரூபா 78,480,159 தொகையை பிரதிநிதித்துவப்படுத்திய 153 கடன்பட்டோரிற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 10 மில்லியன் தொகையை அறவீடு செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு நிறுவனங்களும் அரசாங்க நிறுவனங்களாக உள்ளதால் கலந்துரையாடல் மூலம் தீர்வு காண்பதற்கு அறிவுறுத்தப்பட்டது. அதற்கிணங்க மேலதிக நடவடிக்கைகளுக்காக இந்த விடயம் வெகுஜன ஊடக அமைச்சுக்கு அனுப்பப்பட்டது.<br><br>அரசாங்க பெற வேண்டியவைகள் தொடர்பாக 2019.09.09 இல் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் தலைமையில் கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டதுடன் அக்கூட்டத்தில் வங்கி உத்தியோகத்தர்கள் அழைக்கப்பட்டு தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய குறித்த ரூபா 10 மில்லியன் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டிருந்தது.<br><br>தேசிய சேமிப்பு வங்கியின் உயர் பதவியில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர், இப் பணியானது வங்கியின் எழுத்துமூலமான அங்கீகாரம் இல்லாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும், எனவே உரிய கொடுப்பனவை தேசிய சேமிப்பு வங்கியால் மேற்கொள்ள முடியாதுள்ளது என்றும் கூறியிருந்தார். | கடன்பட்டோர் மீதிகளை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2015 யூலை 14 ஆம் திகதிய 3/2015 ஆம் | (i) | ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படக்கூடிய | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் | சுற்றறிக்கையின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதி பிரமாணங்களின் 371(2)(ஆ) மற்றும் 371(5) ஆம் பிரிவுகள் | | செயல்நிமித்த கட்டுநிதியின் ஆகக்கூடிய எல்லை ரூபா 100,000 ஆக காணப்படுகின்ற போதிலும் நிகழ்ச்சித்திட்டங்கள், தங்குமிடங்கள் மற்றும் கொள்வனவு ஆகியவற்றிற்காக எல்லையை விஞ்சி 46 சந்தர்ப்பங்களில் ரூபா 40,406,563 தொகை வழங்கப்பட்டிருந்தது. | ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படக்கூடிய கட்டுநிதியின் ஆகக்கூடிய தொகை ரூபா 100,000 ஆக உள்ள போதிலும் இக் கூட்டுத்தாபனத்தின் பணியின் தன்மைக்கு ஏற்ப தயாரிப்புச் செயன்முறையின் போது குறித்த எல்லையை விஞ்சி முற்பணங்கள் வழங்கப்பட வேண்டியிருந்தன. | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) | பெறப்பட்ட செயல்நிமித்த கட்டுநிதி சம்பந்தப்பட்ட வேலை பூர்த்தியடைந்த பின்னர் 10 நாட்களுக்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் ஒரு வருடத்திற்கு மேற்பட்டிருந்த மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 09 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட முற்பணங்களின் மீதி ரூபா 6,606,962 ஆக காணப்பட்டது. | சம்பந்தப்பட்ட வேலை பூர்த்தியடைந்த பின்னர் 10 நாட்களுக்குள் முன்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு செயன்முறையின் தன்மை காரணமாக நடைமுறையில் அதற்கிணங்க மேற்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில், முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு உயர் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் மேலதிக காலம் வழங்கப்படுகிறது. முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள் | | | |
| | 2015 யூன் 16 ஆம் திகதிய பிஈடி 3/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபன தலைவருக்கு செலுத்தப்பட வேண்டிய படிக்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது ரூபா 548,388 தொகை விசேட படிகள் மற்றும் ஏனைய படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | தலைவரின் மாதாந்த படி போதுமானதாக இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. எனவே 02/58 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அத்தகைய மேலதிக படிகளை கொடுப்பனவு செய்வதற்கு எந்த தடையும் காணப்படாததன் காரணமாக 2010/10/01 முதல் ரூபா 30,000 மேலதிக படியொன்று பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டது.<br><br>2015/03 ஆம் இலக்க திருத்தப்பட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த மேலதிக படியானது 2018.07.08 இல் அங்கீகாரத்திற்காக முன்னாள் வரிசை அமைச்சாகவிருந்த நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சிற்கு அனுப்பப்பட்டது.<br><br>உபசரணை படியானது 2020 ஆம் ஆண்டில் ரூபா 20,000 வரை குறைக்கப்பட்டிருந்ததுடன் மேலதிக படியானது தற்போது தலைவரால் பெறப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2.3 ஆம் பந்தி | போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிக்கு உரித்தில்லாத 99 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளாக ரூபா 8,203,940 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்தின் தொடக்கத்தில் நிறைவேற்று தர உத்தியோகத்தர்களிற்கு எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்ததுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தற்போதுள்ள தரப்படுத்தல் முறைமையின் பிரகாரம் IV ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்ட நிறைவேறுத்தரமல்லாத உத்தியோகத்தர்களிற்கு ரூபா 2,000 போக்குவரத்து படி செலுத்தப்பட்டிருந்தது. இறுதித் திருத்தம் 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு அமைச்சின் பரிந்துரையுடன் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனம் தொடங்கப்பட்டதிலிருந்து வழங்கப்பட்டு வரும் சலுகையாக இது காணப்பட்டதால் குறித்த படி தொடர்ந்து செலுத்தப்பட்டு வருகிறது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தால் பேணப்பட்ட இரண்டு வங்கி நடைமுறைக் கணக்குகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட மேலதிகப்பற்று எல்லை மீளாய்வாண்டின் போது ஒரு மாதத்தைத் தவிர ஒவ்வொரு மாதத்திலும் கூட்டுத்தாபனத்தால் மீறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வட்டியாக ரூபா 29,085,302 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டு முழுவதும் பரவிய கொவிட் தொற்றுநோய் காரணமாக கூட்டுத்தாபனத்தின் வருமானம் குறைவடைந்திருந்ததுடன் அது கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையின் பாதகமான சூழ்நிலைக்கு தாக்கமளித்திருந்தது. ஆகையால் நாளாந்த தேவைகளுக்கு மேலதிகப்பற்று வசதிகள் பெறப்பட வேண்டியிருந்தன. அதற்கிணங்க வட்டிகள் செலுத்தப்பட வேண்டியிருந்தன. | வங்கி மேலதிகப்பற்று உரிய எல்லையை மீறாதவாறு பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 234,300,093 நட்டமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 461,039,399 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 226,739,306 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. 2020 ஆம் நிதியாண்டின் போது ரூபா 310,000,000 தொகையான மீண்டெழும் செலவினத்திற்காக பெறப்பட்ட அரசாங்க மானியம் இம் முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான ரூபா 1,049,126,350 வான்கால விற்பனை வருமானத்தை முன்னைய ஆண்டுக்கான ரூபா 1,742,947,899 வான்கால விற்பனை வருமானத்துடன் ஒப்பிடும் போது வான்கால விற்பனை வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 40 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. நிகழ்ச்சித்திட்டம் மற்றும் விநியோகச் செலவினம் மற்றும் வரிச் செலவினம் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 28 சதவீதம் மற்றும் 62 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய மூன்று வருடங்களிற்கான மொத்தலாபம் மற்றும் தேறியலாபம் என்பன குறைவடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டில் இவை எதிர்மறை பெறுமதி வரை குறைவடைந்திருந்தன. மேலும் நடைமுறை விகிதம் தொடர்ந்து குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 7(1) ஆம் பந்தியின் பிரகாரம் வருமானக் கணக்கின் ஆபத்தான பற்றாக்குறையை 5 வருட காலப்பகுதியினுள் அல்லது அந்தக் கணக்கின் உச்சக்கட்ட மிகை மூலம் நிதி அமைச்சரால் தீர்மானிக்கப்பட்ட எந்தவொரு காலப்பகுதியினுள்ளும் தீர்ப்பனவு செய்வதற்கு போதுமானதாக இருக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளைப் பேணுவது கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். எனினும் கூட்டுத்தாபனத்தின் அண்மைய ஐந்தாண்டுகளின் தேறிய நட்டம் ரூபா 943,832,028 ஆக காணப்பட்டதுடன் | கருத்துரை வழங்கப்படவில்லை. | நட்டங்களை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டினால் எதிர்பார்க்கப்பட்ட நிலை அடைந்து கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | கொழும்பு 07, பௌத்தலோக மாவத்தை மற்றும் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் இயங்கிவரும் கட்டிடத் தொகுதி ஆகியவற்றில் அமைந்துள்ள 8 ஏக்கர் காணியின் சட்டரீதியான உரிமையை மாற்றுவதற்கும் நிதிக்கூற்றுக்களிற்கு பெறுமதியை எடுத்துக் கொள்வதற்கும் கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்ட 1982 ஆம் ஆண்டு முதல் கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் காணியின் சட்டரீதியான உரிமையை மாற்றுவதற்காக 2014.03.11 இல் வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சரால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விஞ்ஞாபனத்திற்காக இவ் விடயத்தை தீர்ப்பதற்கு வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடுவதற்கு அமைச்சரவையினால் 2014.05.20 இல் தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருந்தது.<br><br>அதற்கிணங்க தற்போது ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணியின் சட்டரீதியான உரிமையை கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு மேல் மாகாண ஆளுநர் இணக்கம் தெரிவித்திருந்தார். குறித்த உடன்படிக்கையுடன் மேலதிக நடவடிக்கைகளுக்காக காணி ஆணையாளர் நாயகத்திற்கு 2021.10.30 இல் கடிதம் ஒன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | ஆதனத்தின் சட்டரீதியான உரிமை மாற்றப்பட வேண்டியதுடன் பெறுமதி கணக்குகளிற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | இலங்கையின் அடையாளத்தை உலகிற்கு அறிமுகப்படுத்துவதற்காகவும், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் அறிவையும் மகிழ்ச்சியையும் மேம்படுத்துவதற்காகவும் இத்தாலி | ஏனைய ஐரோப்பிய நாட்டில் செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தின் மூலம் தொலைக்காட்சி அலைவரிசையை பேணுவதற்காக முற்பணமாக 2015/01/02 இல் வழங்கப்பட்ட | தேவையான சந்தர்ப்பங்களில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட வேண்டியதுடன் செலுத்தப்பட்ட முற்பணத்தை அறவீடு |

| | | |
|---|---|---|
| அல்லது ஐரோப்பாவில் நிறுவப்பட்ட ஸ்ரூடியோவில் செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தின் ஊடாக தொலைக்காட்சி அலைவரிசையை பேணுவதற்கும் நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு தற்காலிக குத்தகை அடிப்படையில் தேவையான உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் 2014 திசெம்பரில் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதி அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் முற்பணமாக 2015 சனவரி 02 இல் தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 3,454,279 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் குறித்த பணி 2015 ஆம் ஆண்டிற்குப் பின்னர் முற்றாக கைவிடப்பட்டதுடன் மீளாய்வாண்டு வரையிலும் குறித்த முற்பணத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 3,454,279 கொடுப்பனவிற்கு எதிராக சட்ட வழக்கொன்று தொடரப்பட்டு நடைபெற்று வருகின்றது. | செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் போது ஒளிபரப்பப்பட்ட 80 நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக 119 வான்கால மணித்தியாலங்கள் மற்றும் 37 நிமிடங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்கான ரூபா 30,250,006 வான்கால வருமானம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் கட்டணங்கள் அறவீடு செய்யப்படாமல் தவறவிடப்பட்டிருந்தது. | அரசாங்கத் தொலைக்காட்சி அலைவரிசையாக தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் கட்டணங்கள் அறவிடப்படாமல் ஒளிபரப்பப்படுகின்ற சில சந்தர்ப்பங்கள் உள்ளன. உதாரணமாக, மகாநாயக்க தேரரின் இறுதிச் சடங்குகள் அல்லது வேறு ஏதேனும் மத குருமார்களின் இறுதிச் சடங்குகள், மதச் சடங்குகள் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஏனைய நிகழ்ச்சிகள் கட்டணங்கள் அறவீடு செய்யப்படாமல் ஒளிபரப்பப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் உள்ளன. | நட்டங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 182 நிரந்தரப் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 28 பதிற்கடமை பதவிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருக்காத 14 பதவிகளுக்கு 27 நிரந்தர ஊழியர்களும், ஒப்பந்த அடிப்படையில் 12 ஊழியர்களும் பணி ஒதுக்கீட்டு அடிப்படையில் 2 ஊழியர்களும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | கூட்டுத்தாபத்துக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது 2020.12.31 இல் உள்ளவாறு 1041 நிரந்தரப் பதவிகளையும் 08 ஒப்பந்த அடிப்படையிலான பதவிகளையும் கொண்டிருந்தது. 867 நிரந்தர ஊழியர்களும் 27 ஒப்பந்த மற்றும் பணி ஒதுக்கீட்டு ஊழியர்களும் காணப்பட்டனர். அதற்கிணங்க மொத்த பதவியணியினர் 894 ஆக காணப்பட்டது. 2020.12.31 இல் உள்ளவாறு பதிற்கடமை அடிப்படையில் 25 நியமனங்கள் இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது தவறானதாகும். மேலும் அத் திகதியில் உள்ளவாறான பதிற்கடமை நியமனங்கள் 08 மாத்திரமே ஆகும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |